# 2 கொரிந்தியர்

## கிறிஸ்தவரின் அடையாளம்

X

R. JOSE RAGUL BENNI

# *2 கொரிந்தியர்*

***ஆசிரியர்:*** ***பவுல் (1:1)***

***காலம் :*** ***கி.பி 56-59***

***பிண்ணனி:*** ***அ.*** *பவுல் சிறைக்கு செல்லும் முன்பு எழுதப்பட்டது.*

***ஆ.*** *முதலாம் நிருபத்தின் மூலம் அநேகர் மனம்திரும்பினார்கள். இதை மெச்சி இக்கடிததை எழுதினார். (2கொரி7:6,7)*

***இ.*** *பவுலின் செயல்பாட்டை குறைகூறி அவருடைய அப்போஸ்தலதுவத்தை கேள்வி கேட்டார்கள். (11:5-10;12:11,12)*

- *பகுதி 1 --------> மன மகிழ்ச்சி, முதலாம் நிருபத்தில் மனம் மாற்றம் ( 1-9 )*
- *பகுதி2 --------> காணிக்கை ( 8,9 ), பவுலின் அப்போஸ்தலிக்கம் மெய்பிக்கப்படுதல் ( 10-13 )*

***மையகருத்து:***

***அ.*** *பவுலின் அப்போஸ்தலிக்கம் மெய்ப்பிக்கப்படுதல்*

***ஆ.*** *கிறிஸ்தவரின் அடையாளம்*

# *CHAPTER 1*

# *அதிகாரம் 1*

***துன்பத்தில் தேவனின் ஆறுதல் ( 1-11 )***

*1.* *பவுலின் தொடக்கம் ( 1 கொரி 1:1,2; கலா1:1,2)*

***3. அ. "இரக்கங்களின் பிதா"- FATHER OF MERCIES –*** *" கருனை, தயை"- தேவனோ இரக்கத்தில் ஐஸ்வரியம் உள்ளவர் ( எபே 2:3 ).தேவனே இரக்கம் காட்டுவதில் முதல். தேவனுடைய இரக்ககளின் நிமித்தம் அவருடைய சித்ததிற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் ( ரோம 12:1 ). நாமும் இரக்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும் ( கொலே 3:12 )பார்க்கவும் 1 பேது 2:10*

***ஆ "சகலவிதமான ஆறுதலின் தேவன்"- GOD OF ALL COMFORT-*** *"ஆறுதல், புத்திசொல்"- இந்த புஸ்தகத்தில் 11 முறை வருகிறது. சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்பவர் ( 2 கொரி 7:6 ). கவலையில், கஷ்டத்தில், இழப்பில், பயத்தில் நம்மை வந்து தேற்றுவது தேவனே ( ரோம 15:6 ). தேவ வசனம் ஆறுதல் தரும் (ரோம15:3;அப்15:30.31 ). பாவம் நம்மை நொதிக்கிறது ( எசா 1:3-6 ).*

***இ.*** *தேவனுக்கு நாம் நன்றி கூற வேண்டும். ( சங் 103: 1-3 )*

***4.*** *சபை ஆறுதலை பகிர்கிறது.*

***5.*** *வசனத்தை சொல்வதினால் பாடுவந்தாலும். அது நமக்கு ஆறுதல் தருகிறது. கிறிஸ்து நமக்கு ஆறுதல் தருகிறார். ( 2தீமோ 3:11,12; 1 பேது 4:12-14,16 )*

***6,7.*** *சபையின் ஐக்கியம். சபை கிறிஸ்துவின் சரீரம். இது ஒற்றுமையுள்ளது. ஒரு அவயம் பாடுபட்டால் எல்லா அவயமும் பாடுபடும், ஒரு அவயம் மகிமைப்பட்டால் எல்லாம் அவயமும் மகிமைபடும் ( 1 கொரி12:13-27 ).*

***8-10. அ.*** *உபத்திரவத்தின் நேரத்தில் நாம் தேவனையே நம்பியிருக்க வேண்டும் (அப் 27: 20-25 ).*

***ஆ*** *தேவன் உபத்திரவத்திலிருந்து தப்புவிக்கிறார், தப்புவிப்பார், தப்புவித்தார் ( எசா 46:4; ரோம 8: 28-31 ).*

***12. " மாம்சத்திற்கேற்ற ஞனத்தோடே நடவாமல்"-*** *பரலோகத்திலிருந்து வரும் ஞானம் ( யாக்3:17 ). ஆனால் மாம்ச ஞானம் ( யாக் 3:15,16 ).*

**குறிப்பு: இந்த சபையில் பவுலின் மீது குற்றச்சாட்டுகள், கேள்விகள் இருந்தன.**

***13.*** *பார்க்கவும் பிலி 3:16-19; 2 பேது 3:2*

***14-16*** *பவுல் எப்படிப்பட்ட யோசணையில் இருந்தார் ?*

*கொரிந்தியாரிடம் இரண்டாம் தரம் வரவும் முதலில் இவர்களிடம் வந்து, இவர்களின் ஊர் வழியாய் மக்கெதோனியா நாட்டுக்கு*

போகவும் மக்கெதொனியா விட்டு மறுப்படியும் இவர்களிடம் வரவும் கொரிந்தியார்கள் யுதேயா தேசத்துக்கு வழிவிட்டானுப்பவும்.

*17.* எப்படி யோசித்தது? 16,15 வசனத்தை பார்க்கவும்

*19.* இயேசுவும் அவரின் ஊழியர்களும் எப்படி இருக்கிறார்கள் ?.

ஆம் என்றே

*20.* கிறிஸ்துவுக்குள் வாக்குத்தத்தங்கள் எப்படி இருக்கின்றன ?

**அ.** ஆம் என்றும், ஆமென் என்றும்

**ஆ.** எபே 1:3- யில் கிறிஸ்துவுக்குள் மாத்திரமே சகல ஆவிக்குரிய ஆசிர்வாதங்கள் உள்ளன. கிறிஸ்துவுக்கு வெளியே ஒரு ஆசிர்வாதமும் இல்லை. நாம் ஞானஸ்நானம் எடுக்கும் போதே கிறிஸ்துவுக்குள் போகிறோம். கலா 3:27

*21.* **அ. "கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி"-** கிறிஸ்துவுக்குள் ஆசிர்வாதங்கள் உள்ளன.( 1:20; எபே 1:23 ). தேவன் நம்மை ஸ்திரப்படுத்துகிறார், அதாவது உறுதிப்படுத்துகிறார். இது எப்படி நடக்கிறது ? வசனம் நம்மை வளர செய்கிறது. விசுவாசத்தை வளர செய்கிறது ஆகவே நாம் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுகிறோம். உபத்திரவம் கூட நாம் ஸ்திரப்பட உதவும். ( 1பேது 2:3; 2 கொரி 1:24; கொலே 2:6,7; எபே 4:14-16;எபி 12:7-11 ).

**ஆ "நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே" -** நம்மை அபிஷேகம் பண்ணினது தேவனே என பார்க்கிறோம். நாம் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என தெரிந்துக்கொள்கிறோம். பார்க்கவும் (1 யோவா 2:27; 1 கொரி 2:12,13; அப் 2:38)( 1சாமு 15;1; 16:12 ).

*22.* **அ. " அவர் நம்மை முத்தரித்து"-** நாம் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள் முத்திரை போடப்பட்டோம். ( எபே1:13; எபே 4:30 ). ஞானஸ்நானத்தின் போது பரிசுத்த ஆவியை நாம் பெற்றுக்கொண்டோம். (மாற்16:16; எபே4:30; அப் 2:38 )

**ஆ** அவர் நம்முடைய இருதயத்தில் எதை கொடுத்திருக்கிறார் ?

ஆவியின் அச்சாரம். ரோமர் 5:5 -யில் நமக்கு தரப்பட்ட பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்முடைய இருதயத்தில் ஊற்றப்பட்டுள்ளது. 2கொரி 6:16

*23.* கொரிந்து சபையார் எப்படி நின்றார்கள் ? விசுவாசத்தினால் ( எபி 11: 17)

# *CHAPTER 2*

# *அதிகாரம் 2*

***இந்த நிருபத்தை எழுத மற்றும் வரதாதிற்கு காரணம் ( 1-5)***

***1.*** *பவுல் எப்படி வர கூடாது என தீர்மானித்திருந்தார்? துக்கத்துடனே*

***3.*** *எதற்காக எழுதினார் ?*

*i.* *என்னுடைய சந்தோஷம் உங்களேல்லாருக்கும் சந்தோஷமாயிருக்க வேண்டும்*

*ii.* *வரும் போது சந்தோஷப்படுத்த வேண்டியவர்களால் துக்கமடையாத படிக்கும்.*

***4.*** *பவுல் எப்படி எழுதினார் ?*

*I.* *அன்பின் மிகுதியை அறியும் படிக்கும்*

*II.* *வியாகுலம், மன இடுக்கமும், கண்ணீரோடே எழுதினார்.*

***5-10. அ.*** *குற்றாவாளியை மன்னித்தல்*

*கருத்து: சபையில் உள்ள சகோதரர்கள் நமக்கு துன்பம் தரும் போது நாம் மன்னிக்க வேண்டும். கிறிஸ்துவும் நம்மை மன்னித்தாரே. சபைக்கு வெளியே இருப்பவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும். ( லூக் 6:27,28; ரோம 12:17-21; கொலே3:13 ).*

***ஆ*** *நாம் என்ன செய்ய வேண்டும்?*

*I.* *நமது அன்பு அவர்களுக்கு (துன்படுத்துகிறவர்களுக்கு) தெரிய வேண்டும் ( 8 வச )*

*II.* *நாம் வசனத்திற்கு கீழ்படிய வேண்டும். இது ஆவிக்குரிய வளர்சியை காண்பிக்கிறது. ( 9 வச )*

***11. அ.*** *சாத்தான் சகோதரர்கள் மத்தியில் பிரிவினை ஏற்படுத்த தந்திரமாய் செயல்படுகின்றான் ( மத் 20:24; 1 பேது 5:9 ). நாம் தெளித்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் ( 1 பேது 5:8 ).*

***ஆ “அவனின் தந்திரம்”-“திட்டம்,எண்ணம்,நினைவு,உபாயம்”-*** *சாத்தான் ஆதி முதலாய் தந்திரமாய் செயல்ப்படுகின்றான் ( 2 கொரி 11:3 ). அவன் இந்த உலகத்திலிருக்கிறதை தன்னுடைய ஆயுதமாக பயன்ப்படுத்துகிறான் (1யோவா2:15,16).*

*இவன் தேவனுடைய காரியங்களை தடை செய்யப்பார்க்கிறான். ( 1 தெச 3:5 ). அவனுக்கு விரோதமாக நாம் போர் செய்கிறோம். அவன் இந்த உலகத்தின் அரசங்ககளை பயன்படுத்துகிறான். ( எபே 6:11,12 ). இந்த போரில் ஜெய்பதற்கு நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்களை எடுத்துக் கொள்ள வேண்டும் ( எபே 6:11-18 ). நாமே கடைசியில் ஜெயம் கொள்கிறோம் ( ரோம 15:20; வெளி 17:14 ).*

***12.*** *கதவு என்பது வாய்ப்புகளை குறிக்கிறாதாக உள்ளது. ( 1 கொரி 16:9; வெளி 3:8). கர்த்தரே வாய்ப்புகளை தரக்கூடியவர்.*

***14. அ.*** *நாம் வெற்றிக்கொள்பவர்களாய் இருக்கிறோம். (ரோம 8:37;1 யோவா5:4 )*

***ஆ “எல்லா இடங்களிலே”-*** *தேவ வசனம் கட்டப்படவில்லை ( 2 தீமோ 2:8,9 ). அது எந்த இடமாய் இருந்தாலும் சரி. அது நீதிமன்றம் போன்ற இடமாய் இருந்தாலும் (அப் 21:37-40;22:1-16 ). உயிர் போகிற நேரமாயும் ( அப் 27:22-25 ); சிறையானலும் (அப்28:16,30,31; பிலி1:10 ). அது யூதர் இடமாய் இருந்தாலும் ( அப் 4:12,18,19 ). புறஜாதியார் இடமாய் இருந்தாலும் ( அப் 17:23-32 ) எல்லா இடங்களிலும் அப்போஸ்தலர்கள் தங்களுடைய வேலையை செய்தார்கள்.*

***இ. “எந்த வாசனை”-*** *அவரை அறிகிற வாசனை (Savour)= நறுமணம், வாசனை. யோவா 12:3 யில் மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தை பூசிய போது வந்த நறுமனம் போல. தேவனுடைய வார்த்தை வாசனையாக, வெற்றியின் நறுமணமாக உள்ளது. தேவனுடைய வார்த்தை எப்பொழுதும் சிறந்தது (உபா 32:2 ).*

***15. அ.*** *இரட்சிக்கப்படிகிறவர்களுக்கும், கெட்டு போகிறவர்களுக்கும் அப்போஸ்தலர்கள் எப்படிபட்டவர்களாக இருக்கிறார்கள் ? நற்கந்தம் ( SWEET SAVOUR)*

***ஆ*** *இது கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். கிறிஸ்தவர்கள் நற்கந்தாமாக, தேவனுக்கு சுகந்த பலியாக உள்ளன. ( எபே 5:2; ரோம 12:1 ).*

***இ.*** *கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சுமக்கிறவர்கள் ( 4:10 ).*

***16. அ. “மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும்”-*** *கெட்டுப்போகிறவர்களுக்கு சுவிசேஷம் மரண வாசனையாக சுவிசேஷம் உள்ளது. அதாவது சுவிசேஷத்தை தள்ளுகிறவர்களுக்கு, கீழ்படியாதவர்களுக்கு மரண வாசனையாக உள்ளது. ( 2தெச 1:7-10; அப்24:25 ).*

***ஆ “ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்”-*** *இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு சுவிசேஷம் ஜீவ வாசனையாக உள்ளது. அதாவது சுவிசேஷசத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கிறது. ( மாற் 16:15,16 ). அதாவது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு ( ரோம 15:25,26 ), நித்திய ஜீவன் வைக்கப்பட்டுள்ளது. (2 தீமோ 4:8 ). முடிவு பரியந்தம் நிலை*

*நிற்கிறவனே இரட்சிக்கப்படுகின்றான். ( வெளி 2:10 ). சுவிசேஷம் மூலமே நமக்கு விசுவாசம் வருகிறது. ( ரோம 1:16, 17 ).*

***17.*** ***அ.*** *அப்போஸ்தலர்கள் ஏன் நற்கந்தமாய் இருக்கிறார்கள் ?*

1. *தேவ வசனம் நறுமணம் தரகூடியது.*
2. *இவர்கள் தேவ வசனம் கலப்பாய் பேசவில்லை*
3. *துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும் தேவ சந்நிதியில் பேசினார்கள்.*

*புதிய ஏற்பாடு தேவானல் அருளப்பட்டது. அப்போஸ்தலர்கள் வசனத்தை மாற்றமல் அப்படியே பேசினார்கள். நாமும் அப்படி செய்கிறோம், செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டு சபையாரும் நற்கந்தமாக உள்ளனர் ( எபே 5:2; ரோம 12:1 ). நாமும் தேவனுடைய வார்த்தையை கலப்பில்லாமல் பேசுகிறோம். ( 1 தெச 2:4 ).*

***ஆ*** *இந்த தகுதியை தேவனே கொடுத்தார். ( 3:5,6; வெளி 4:10,11; வெளி 5:9)*

***குறிப்பு:*** *இவர்கள் தேவனுடைய வார்த்தை கலப்பாய் பேசினால், தேவனுடைய வார்த்தை தன்னுடைய ஆரோக்கியத்தை இழந்திருக்கும்.*

# *CHAPTER 3*

# *அதிகாரம் 3*

# *பழைய உடன்படிக்கையை விட புதிய உடன்படிக்கை மேலானது*

***1.*** **அ.** *தன்னை புகழ்வது அல்ல. இது தேவனால் வந்தது ( 3:5,6 ).*

***2.*** **அ.** *புதிய உடன்படிக்கை இருதயத்தில் எழுதப்பட்டது (எபி 8:10 ). நம்முடைய நடக்கையே மற்ற மனிதர்கள் முன்பு நாம் எதை பின்பற்றுகிறோமோ (புதிய உடன்படிக்கை ) அதை காட்டுகிறது ( 1 பேது 2:12; 1 போது 3:2; எபி 8:10,11 ).*

***3.*** **அ.** *நாம் (கிறிஸ்தவர்கள்) கிறிஸ்துவின் நிருபங்கள் ( 3:3 ). ஏனென்றால் தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது. ( 3:2; எபி8:10). நாம் அந்த ஆவியின் வசனத்தினால் நடக்கிறோம் (எபே 3:16; எபே 5:18 ). நாம் வசனம் என்கிற ஆவியின் பட்டயத்தினால் நடத்தப்படுகின்றோம், நிறைந்துயிருக்கிறோம் ( ரோம 8:1,2,5 0 ). நாம் கிறிஸ்துவின் நற்கந்தங்கள் ( 2கொரி2 :15 ).*

**ஆ** *அந்த நிருபம் மையினால் வந்தது அல்ல. மாறாக தேவனுடைய ஆவியினால் அதாவது புதிய உடன்படிக்கை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. இது பழைய உடன்படிக்கை போன்ற கற்பலகையில் எழுதப்பட்டது அல்ல.*

***கருத்து:*** *அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே பேசினார்கள். இந்த புதிய உடன்படிக்கை ஆவிக்குரியது ( ரோம 8:2 ). இயேசு சொன்ன வசனமே ஆவியாய் இருக்கிறது ( யோவா 6:63 ).*

**இ.** ***"தேவனுடைய ஆவியினால்"- ரோமர் 7:6*** *பழைய ஏற்பாடு மாம்சத்திற்குரியது. ஆனால் புதிய ஏற்பாடு ஆவியின் பிரமானம் ( ரோம 8:2 ).*

**ஈ.** ***"இருதயங்களின் சதை"-*** *நியாயப்பிரமானம் கற்பலகையில் எழுதப்பட்டது ( யாத் 32:15,16 ). ஆனால் புதிய உடன்படிக்கை என்பது தேவனுடைய ஆவியினால் நமக்குள் எழுதப்பட்டுள்ளது. ( எபி 8:10 )*

***5.*** **அ.** ***"தகுதி"-SUFFICIENT*** *– உண்மையாக தேவனுடையஊழியதை செய்வதற்கும், புதிய உடன்படிக்கை பெறுவதற்கும், தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதற்கும் நாம் தகுதியானவர்கள் அல்ல. தேவனே மகிமைக்கும், கனத்திற்கும் பாத்திரர். ( வெளி 4:10,11; வெளி 5:9-13 ).*

**6. அ. "புதிய உடன்படிக்கை'-** *பழைய உடன்படிக்கைக்கு என்னவாயிற்று?*

a) *பழைய உடன்படிக்கை இஸ்ரவேலுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. ( ரோம 3:19; உபா 4:8; எபி 8:9 ).*
b) *இது தற்காலிகமானது. ( கலா 3:19 )*
c) *இயேசுவே சிலுவையில் நியாயப்பிரமாணத்தை முடிந்தார். ( ரோம 10:4; கொலே 2:14 ).*
d) *இனி பழைய உடன்படிக்கை இல்லை ( எபி 8:13; ரோம 7:6; எபி 7:12,18,19; கலா 3:24,25 ).*
e) *இப்பொழுது நாம் புதிய உடன்படிக்கைக்கு கீழே உள்ளோம். ( 2 கோரி 3:6; ரோம 7:6 ).*
f) *இது சர்வ சிருஷ்டிக்கும் உரியது ( மத் 28:18-20; மாற் 16:15,16 ). இது பூரணமானது ( யாக் 2:12 ).*

**கருத்து:** *இன்றும் அநேகர் பழைய உடன்படிக்கையின் படி இசைக்கருவி, கைதட்டுதல் போன்ற காரியங்களை செய்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவை விட்டு பிரிந்து இருக்கிறார்கள் (கலா 5:4 ).*

**ஆ " ஆவிக்குரியதாயிருக்கிறது"-** *இயேசு சொன்ன புதிய உடன்படிக்கை ஆவிக்குரியது. இதையே அப்போஸ்தலர்கள் பேசினார்கள். ( யோவா 6:63; 1 கொரி 2:11-15; ரோம 8:2 ). இந்த புதிய உடன்படிக்கையின் படி செய்கிறவன் ஆவிக்குரியவன்.*

**இ. "ஆவி உயிர்ப்பிக்கிறது"-** *இந்த புதிய பிரமாணம் ஜீவனை உடையது.(ரோம 8:2 ), புதிய பிரமாணம் நமக்கு ஜீவனை தருகிறது. ( ரோம 8:30 ).*

**8. அ.** *நியாயப்பிரமாணம் ஒழித்துப் போககூடியது. இயேசு தன்னுடைய சிலுவையில் பழைய பிரமாணத்தை முடிந்துவிட்டார் ( எபே 2:15; கொலே 2:14; எபி 7: 18,19 ).*

**ஆ** *நியாயப்பிரமாணத்தின் மகிமையை விட இந்த ஆவிக்குரிய புதிய உடன்படிக்கை அதிக மகிமை உடையது. ( எபி 8:6-13 ).*

**11. அ.** *புதிய பிரமாணம் நிலைத்திருக்கிறது.*

**13. அ.** *மோசே ஏன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக் கொண்டான் ?*

*ஒழிந்து போவதின் முடிவை இஸ்ரவேலர்கள் நோக்கிபராதபடிக்கு*

**14. அ.** *ஏன் முக்காடு நீங்கமால் இருக்கிறது ?*

*இஸ்ரவேலர்களுடைய மனது கடினப்பட்டது.*

**ஆ** *கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தை ( பழைய ஏற்பாட்டை ) முடித்தவர் ( ரோம 10:4; எபே 2:15 ). முக்காட்டை நீக்குபவர் கிறிஸ்து*

**15,16. அ.** *எப்பொழுது அவர்களுடைய இருதயத்தில் இருக்கிற முக்காடு எடுப்பட்டுப்போம்?. கர்த்தரிடம் மனம் திரும்பும் போது*

*17.* ***அ.*** *கர்த்தரின் ஆவிக்குரிய பிரமாணம் நம்மை விடுதலை ஆக்குகிறது என (ரோம 8:2; ரோம 6:17; ரோம 7:4-6 ) பார்க்கிறோம்.*

***18.*** ***அ.*** ***"கண்ணாடியிலே காண்கிறது போல கண்டு"-*** *யாக் 1:23; 1கொரி 13:12, இயேசுவை குறித்து வேதாக வசனங்களே சாட்சி கொடுக்கிறது. ( யோவா 5:39 ). வேத வசனங்களினாலே இப்பொழுது இயேசு எப்படிப்பட்டவர் என்பதை நாம் அறிந்துக் கொள்கிறோம்.*

***ஆ*** ***"மறுரூபப்படுகிறோம்"-*** *இது கர்த்தரால், அவருடைய ஆவியின் வசனத்தினால் ( ரோம 8:2 ) நடக்க கூடியது. இந்த வார்த்தைக்கு* **"மெட்டாம பூ"** *என்கிற கீரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு "இன்னொரு வடிவத்திற்கு மாறுதல்,உருமாறுதல்" என அர்த்தம். நாம் இந்த உலகத்திற்கு ஏற்றப்படி மாற்றம் அடைய கூடாது.( ரோம 12:2 ). நாம் தேவனுடைய நன்மை, பிரியம், சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்க மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாக வேண்டும். கொலே 3:10 புதிய மனுசனை தரித்துக் கொள்ளுதல் ( கலா 3:27; ரோம 6:3-6; எபே 4:22-24 ). நாம் இயேசுவை போல மாற்றப்படுகிறோம் ( கலா 4:19; கலா 6:17; கலா 2:20 ). மகிமை அடைக்கிறோம்.*

## *CHAPTER 4*

## *அதிகாரம் 4*

## பவுலின் நேர்மை, துன்பம், நம்பிக்கை

***கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளி (1-6)***

*1. அ. **"இப்படிப்பட்ட ஊழியத்தை"-** பழைய ஏற்பாட்டின் மகிமையை விட புதிய உடன்படிக்கையின் மகிமை அதிகம், பெரியது ( 3:11 ). இந்த ஊழியத்திற்கு தகுதிப்படுத்தியது தேவனே ( 2 கொரி 3:6 ). இதினால் இரக்கம் பெற்றிருக்கிறோம்.*

*2. **அ.** எப்படி உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்?*

1. *வெட்கமான அந்தரங்கக் காரியங்களை வெறுத்து. ( எபே 5:11,12; 1 பேது 2:9 ).*
2. *தந்திரமாய் நடவாமலும்*
3. *தேவ வசனத்தை புரட்டாமல் ( 2:17 )*
4. *சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே*

***குறிப்பு:*** *நாம் எப்பொழுதும் தேவனுடைய மனுசனாக இருப்பதையே விரும்ப வேண்டும். மக்களுக்கு எது விருப்பதை தரும் என்பதை விட தேவனுக்கு எது பிரியம் என்பதை மாத்திரமே நாம் பேச வேண்டும். ( 2தெச 2:3,4 ).*

*3. **அ.** சுவிசேஷம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது ( ரோம 16:25 )*

*4. **அ.** எது அவிவிசுவாசிகளுக்கு உள்ளே பிரகாசிக்கவில்லை ?*

*தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையின் சுவிசேஷத்தின் ஒளி. சுவிசேஷத்திற்கு கீழ்படிகிறவர்களுக்கே இரட்சிப்பு, இவர்களே தேவனுடைய பிள்ளைகளாக மாறுகின்றன ( மாற் 16:15,16; 2தெச 1:7 ).*

***குறிப்பு:***

- ***a.*** *இயேசு மெய்யான ஒளி ( யோவ 1:9;12:35,36;9:5 )*
- ***b.*** *தேவன் வெளிச்சம் எனவும், நாம் அவரின் பிள்ளைகள் எனவும் கூறப்பட்டுள்ளது. ( 1தெச 5:5; எபே 5:8 )*
- ***c.*** *சுவிசேஷம் ஒளி ( 2கொரி 4:4 )*
- ***d.*** *சபை ஒளி ( ரோம 13:12; கொலே 1:12,13; 1பேது 2:9 )*

*5. அ. **"அவிவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிரத படிக்கு"-** தேவன் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என விரும்புகிறார் ( 1 தீமோ 2:4 ). ஆனால் அதை அவர்களின் விருப்பத்திற்கே விடுகிறார் ( வெளி 22:17; வெளி 3:20 ). இதற்கு (சுவிசேஷத்திற்கு) கீழ்ப்படியதவர்களை தேவன் அவர்களின் விருப்பத்திற்கே விட்டுவிடுகிறார். அதாவது ஆக்கினைக்கே விடுகிறார். ( உபா 30:19; ரோம 1:26 ).*

***ஆ "இப்பிரபஞ்சத்தின் தேவன்"-** என்பதை யாரை குறிக்கிறது?*

1. *4:3-யில் சுவிசேஷம் மறைவாக இல்லை என பார்க்கிறோம்.*
2. *4:4- யில் தேவன் என்ற பதம் மரியாதை இல்லாமல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நமது பிதாவாகிய தேவனுக்கு இப்படிப்பட்ட பதம் பயன்படுத்தபடாது.*
3. *4:5- யில் தேவன் என்ற பதம் மரியாதையாக பயன்படுத்தப்பட்டுள்ளது எனவே வசனம் 4யிலும் 5 யிலும் தேவன் என சொல்லப்பட்ட பதம் வேறு வேறு நபர்களை குறிக்கிறது*
4. *இது (பிரபஞ்சத்தின் தேவன்) பிசாசை குறிக்க கூடியது. அதாவது இப்பிரபஞ்சம் என்பதன் பொருள் "அஹியோன்" என்கிற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது காலம் அல்லது யுகம் என ஒருமையில் உள்ளது. இது பன்மையில் இல்லை, அதனால் இது "குறிப்பிட்ட காலத்திற்கு" மட்டுமே என நாம் புரிந்து கொள்கிறோம். (வெளி 2:10 ). நமது பிதாவாகிய தேவன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் தேவன் அல்ல, நித்திய ராஜா ( எரே 10:10 ). ஆகவே இப்பிரபஞ்சத்தின் தேவன் என்பது கிறிஸ்துவின் உபதேசத்துற்கு கீழ்படியாத அவிசுவாசம் மீது ஆளுகை செய்கிற பிசாசை இது குறிக்கிறது. (எபே 2:2 ).*

***இ. "மனதை குருடாக்கினான்"-*** *தேவனுடைய கற்பனைக்கு கீழ்படியாதவர்கள் ( சுவிசேஷம் ). இவர்கள் பிசாசினால் பிடிக்கப்பட்டு மனம் குருடாக்கப்பட்டவர்கள் ( மாற் 4:15,18 மத் 15:14). பிசாசு அந்தகாரலோகாதிபதி ( எபே 6:11,12; 1 யோவ 2:11 ).*

*5. அ. எப்படி பிரசிங்கித்தார்கள்? அவர்களைப்பற்றி பிரசங்கிங்கவில்லை, இயேசுவை கர்த்தர் என்றும், அவர்களை ஊழியர்கள் என்றும் பிரசிங்கித்தார்கள்.*

***6. அ.*** *தேவன் என்ன சொன்னார்? இருளிலிருந்து வெளிச்சதை பிரகாசிக்க சொன்னார்.*

***ஆ.*** *தேவன் என்ன செய்தார்? இயேசு கிறிஸ்துவின் மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். சுவிசேஷம் ஒளியை தரக்கூடியது. ( 2 கொரி 4:4; 2தெச 2:14; சங் 119:105)*

***குறிப்பு:*** *4 வசனத்தில் அவிசுவாசிகளுக்கு சுவிசேஷத்தின் ஒளிப்படாத படிக்கு அவர்களின் மனம் குருடாக்கப்பட்டுள்ளது. அதாவது மனம் இருட்டாக உள்ளது. ஆனால் சுவிசேஷத்தை விசுவாசித்து கீழ்படிக்கிறவர்களுக்கு இருதயம் பிரகாசித்தது. ( 2 கொரி 3:3 )*

***இ.*** *எதன் பொருட்டாக இருதயங்களில் பிரகாசித்தார்? இயேசுவின் முகத்திலுள்ள தமது மகிமையின் ஒளியைப் தோன்றப்பண்ணும் பொருட்டு.*

***குறிப்பு:*** *மனம் குருடாக்கப்பட்டவர்களின் குருட்டு தன்மை நீக்கப்பட வேண்டும். அப்போஸ்தலர்கள் இதையே செய்தார்கள் அவர்கள் சுவிசேஷத்தின்*

*ஒளியை பேசினார்கள். நாமும் நம்முடைய இருதயத்தில் பிரகாசித்த சுவிசேஷத்தை கூற வேண்டும்.*

*7. அ. **"பொக்கிஷம்"-** இது தேவனால் வந்தது, இதை மறுப்படியும் பவுல் கூறுகிறார் ( 2:16; 3:5,6 ). வசனம் 6-யில் "எங்கள் இருதயத்தில் ஒளி பிராகசித்தது" என்று கூறினார்கள். சந்தர்ப்பொருளின் அடிப்படையில் இது சுவிசேஷத்தை குறிக்க கூடியதாக உள்ளது. ( கொலே 2:3 )-யில் அறிவு பொக்கிஷம் என கூறப்பட்டுள்ளது. 2 தீமோ 1:13,14-யில் ஆரோக்கியமான உபதேசம் நற்பொருள் என கூறப்பட்டுள்ளது*

*ஆ **"மண்பாண்டங்களில்"-** பொக்கிஷங்களை வைக்க மண்பாண்டங்கள் பயன்படுத்தபடும். சுவிசேஷம் பொக்கிஷம். அதை சுமந்து திரிகிற நம்முடைய சரீரம் மண்பாண்டம் என அறிந்துக் கொள்கிறோம். ( 2கொரி 4:10 )*

***10.** **அ.** இயேசுவினுடைய ஜீவனும் சரீரத்தில் விளங்கும்படி அவர்கள் என்ன செய்தார்கள்? இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் சரீரத்தில் சுமத்து திரித்தார்கள. இயேசுவின் மரணத்தினால் நாம் தேவனின் பிள்ளைகளாய் மாறினோம். ( ரோம 5:15; ரோம 6:3-6 ).*

***11.** **அ.** ஏன் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன ? இயேசுவினுடைய ஜீவன் விளங்கும் படி*

***16.** **அ.** ஏன் அவர்கள் சோர்ந்து போகவில்லை ?*

1. *விசுவாசித்தார்கள் ( 13,14 வச )*
2. *புறம்பான மனுசனை அளித்தார்கள்*

*ஆ **" புறம்பான மனுசனை அளித்தும்"-** நாமும் புறம்பான மனுசனை அளித்து போட வேண்டும் ( ரோம 6:12 ). சரிர இச்சைகளைஅழித்து போட வேண்டும் (1பேது 2:11 ). நம்முடைய சரீரம் பலவீனமானது ( மாற் 14:38 ).*

*இ. **"உள்ளான மனுஷனது"-** நமது உள்ளான மனுசன் வல்லமையாக பலப்பட வேண்டும் ( எபே 3:16 ). உள்ளான மனுசன் புதிதாக்கப்படுகிறான் ( 2 கொரி 5:17 ). புறம்பான மனுசன் பரலோகம் போக முடியாது. உள்ளான மனுசன் தான் பரலோகம் போக முடியும். நாம் உள்ளான மனுசனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் ( மத் 16:26; லூக் 12:15-21 ).*

***17,18** **அ.** நம்முடைய ஓட்டம் அழிந்து போகிறதற்காக அல்ல, அழியா நித்திய வாழ்க்கைகாக அதனால் தான் இது எளிதில் மாற கூடிய லேசான உபத்திரவம். ( வெளி 2:10 ). இது ஆசிர்வாதம் ( 1 கொரி 10:13; 1பேது 4:14; எபி 12:11 ).*

# *CHAPTER 5*

# *அதிகாரம் 5*

# *பவுலின் நம்பிக்கை மற்றும் உத்வேகம்*

***நித்திய ஜீவனை பற்றி உறுதி ( 1-11 ):***

*1. **அ. "பூமிக்குரிய கூடாரம்"-** இது நம்முடைய சரீரத்தை குறிக்கிறது ( 2கொரி 5:7,9 ). இந்த புறம்பான மனிதனை அழித்து போட வேண்டும் ( 4:16 ). நம்முடைய சரீரம் நிலையானது அல்ல ( ரோம 6:12; 2 கொரி 4:11; எபி 13:14; பிர 8:8 ). இந்த சரீரம் மண்ணுக்கு போக கூடியது. ( 4:17,18 ).*

***ஆ. "கைவேலையல்லாத நித்திய வீடு"-** இது பரலோகத்தில் நாம் மாற்றமடைக்கின்ற ஆவிக்குரிய சரீரத்தை குறிக்கிறது ( 1 கொரி 15:42-53 ). பூமிக்குரிய இந்த சரீரம் அழிந்து, நித்தியமான ஆவிக்குரிய சரீரத்தை பெறுகிறோம். நாம் நித்திய ஜீவனுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ( 5:4 ).*

***இ. "நமக்கு உண்டு"-** நாம் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், நாம் பரதேசிகளாய் இருக்கிறோம். ( 1பேது 1:9; 1பேது 1:17 ). நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது ( பிலி 3:20 ). நமது அழியாத, மாசற்ற, வாடாத சுதந்தரம் பரலோகத்தில் உள்ளது ( 1பேது 1:5 ).*

*2. **அ.** இந்த கூடாரத்தில் நாம் என்ன செய்கிறோம்? நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தை தரித்துக் கொள்ள விரும்புகிறோம்.*

***ஆ "தவித்து"-** கவலை, துக்கிப்பு, பெருமூச்சி, புலம்பல், வேதனை குறல் என அர்த்தம் உடையது. நம்முடைய பொக்கிஷம் பரலோகத்தில் உள்ளது. அந்த பரலோகத்தில் தான் நமக்கு சந்தோஷம் உள்ளது. ( வெளி 21:2-4; மத் 6:19-21 )*

*4. **அ. "பாரம் சுமந்து"- (சுமை, அழுத்தும், கனமான)-** இந்த சரீரம் பலவீனம் உடையது ( மாற் 14:38 ). இதில் பயன்படுத்தப்பட்ட அதே கிரேக்க வார்த்தை மத் 26:43; மாற் 14:40; லூக் 9:32 – ஆகிய இடங்களில் மிகுந்த துக்கம் என பயன்படுத்தப்பட்டுள்ளது. பாவமும் பாரமானது என எபி 12:1,2-யில் நாம் பார்க்கிறோம்.*

***ஆ** நாம் எதை விரும்புகிறோம்? இந்த போர்வையை களைந்து போட வேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வையை தரித்தவர்களாயிருக்க வேண்டும் என விரும்புகிறோம். நாம் இயேசு வர காத்துக்கொண்டிருக்கிறோம் அவர் வரும் போது நாம் ஒரு இமை பொழுதில் இந்த சாவுக்குரிய இந்த சரீரத்தை களைந்துவிட்டு ஜீவனுக்குரிய புதிய அழியாத ஆவிக்குரிய சரீரத்தை தரித்து கொள்வோம். (1 கொரி 15:51-57 ).*

*5. **அ. "ஆவியின் அச்சாரம்"-** ஆவியின் அச்சாரம் உடையவர்கள் உறுதியான வாக்குறுதி உடையவர்கள். (அச்சாரம்=உறுதி. நம்முடைய சுதந்திரத்திற்கு (உரிமை,சொத்து) ஆவியானவர் உறுதியான அச்சாரம் ( எபே 1:13,14; 2கொரி 1:22 ). நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கும், தேவனால் மீட்கப்படுவோம்*

*என்பதற்கும், நித்திய ஜீவன் உண்டு என்பதற்கும் ஆவியானவரே நமக்கு அச்சாரம். அவரால் கொடுக்கப்பட்ட வசனங்கள் உறுதியானவைகள் ( 2 பேது 1:19-21 ), தேவனுடைய வசனங்கள் நம்மை உறுதிப்படுத்துகின்றன. இதற்கு நம்மை தேவனே ஆயத்தப்படுத்தினார் ( 2:16; 3:5,6 ).*

***6. அ. "தரிசித்து"- ( பார்த்து )-*** *இதற்கு பெயர் விசுவாசம் இல்லை. விசுவாசம் என்பது பார்ப்பதோ, தொட்டு உணர்வதோ இல்லை. நாம் பார்த்திறாததை நம்புகிற உறுதியே விசுவாசம் ( எபி 11:1 ). இயேசுவை பார்த்தேன் என்பது விசுவாசம் அல்ல.*

***ஆ "விசுவாசித்து நடக்கிறோம்"-*** *நாம் ஆவியின் அச்சாரம் உடையவர்கள் ஏனென்றால் நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கீழ்படித்து நடக்கிறோம் ( எபி 11:6; எபி 10:38; ரோம 1:6,7 ).*

***7,8 அ.*** *நாம் இப்பொழுது இருக்க கூடிய இந்த சரீரம் ஒரு வாடகை வீடு, தற்காலிகமானது. நாம் இங்கு பரதேசிகள் ( 1 பேது 1:5 ). நிலையானது இங்கு இல்லை ( எபி 13:5 )*

***ஆ "தைரியமாயிருக்கிறோம்"-*** *நாம் இந்த நிலையற்ற சரீரத்தில் வாழ்ந்து வந்தாலும் நாம் கர்த்தரின் மீது நம்பிக்கை, தைரியம் வைத்து வாழுகிறோம். அவரே நம்மை தப்புவிப்பார் ( 2 கொரி 1:8-10; ரோம 8:31- 39 ).*

***இ. "கர்த்தரிடத்தில் குடியிருக்க விரும்புகிறோம்-*** *மகிழ்ச்சியான ஒரு இடம். நமக்கான இடம் ( வெளி 21: 3-4; 1 பேது 1:4,5; பிலி 3:20 )*

***9. அ.*** *நாம் எப்படி இருந்தாலும், எங்கு இருந்தாலும் தேவனுக்கு மட்டுமே பிரியமாய் இருக்க வேண்டும். ( மத் 7:21; 1 தெச 2:4 ). இயேசுவை போல் ( யோவ 7:16-18; லூக் 22:42 ).*

***10. அ. "கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு"*** *– இந்த பூமியில் வாழ்கின்ற எல்லாருக்கும் நியாயதீர்ப்பை இயேசு கொடுப்பார் ( அப் 17:31; யோவா 5:22; ரோம 14:10 ). நாம் செய்த நன்மையும், தீமையையும் இயேசு அறிவார். அவர் அக்கினி ஜுவாலை போன்ற கண்களை உடையவர் ( வெளி 1:14 ). நியாயதீர்ப்பு முதலில் சபையில் தொடங்கும் ( 1 பேது 4:17 ). அதனால் நாம் தேவனுக்கு பயந்து நடந்துக்கொள்ள வேண்டும். ( 1பேது 1:17 ).*

***11. அ. "கர்த்தருக்கு பயப்பட தக்கதென்று அறிந்து"-*** *நாம் மனுதனுக்கு அல்ல, தேவனுக்கே பயப்பட வேண்டும். எனென்றால் அவர் தான் நம்மை நியாயதீர்ப்பது. ( சங் 147:11; யோசு 24:14; அப் 4:19,20 ).*

***12,13 அ.*** *பவுலை குறித்து தவறான பிம்பம்*

***14,15 அ.*** *கிறிஸ்துவின் அன்பு என்ன செய்கிறது? நெருக்கி ஏவுக்கிறது.*

***ஆ "நெருக்கி'-(*** *சிறைவைப்பது, கட்டுப்படுத்துவது, அழுத்துவது)- பிலி 1:23, கிறிஸ்துவின் அன்பே நம்மை கட்டுப்படுத்துகிறது. நம்மை செயல்பட வைப்பது அந்த அன்பே ( எபே 3:17-19 ). ஏனென்றால் நமக்காக இயேசு மரித்து பாவத்தில் மரித்த நம்மை ( எபே 2:1 ). உயிர்பித்து அவருக்குள் அவருக்காக பிழைக்கும் படி செய்தார். இனி நான் அல்ல கிறிஸ்துவே ( கலா 2:20 ).*

***17. அ.*** *ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துக்குள் வருகின்றோம். நாம் கிறிஸ்துவை அணிந்துக் கொண்டு அவருக்காக பிழைக்கிறோம் ( 2 கொரி 5:15; கலா*

*3:27 ). இனி பழையவைகள் அதாவது ஞானஸ்நானத்திற்கு முன்பு இருந்த பழைய மனிதனுடைய கிரியை ஒழிந்து போயின. நாம் இப்பொழுது புதிய மனிதர்களாக இருக்கிறோம். ( எபே 4:22-24; ரோம 6:1-6; கொலே 3:5-10 ).*

***கிறிஸ்துவின் ஸ்நானதிபதி ( 18-21 ):***

***18. அ.*** *மறுபடியும் பவுல் இவை அனைத்தும் தேவனலேயே ஏற்ப்பட்டது என்பதை கூறுகிறார்.*

***20,21. அ.*** *நாம் சத்துருக்காளாய் இருக்கும் போது நம்மை இயேசுவின் மரணத்தினால் அவருடைய பிள்ளைகளாய் ஒப்புரவாக்கினார், சமரசமாக்கினார். ( ரோம 5:10; கொலே 1:20,21 ). நாம் தேவனுடைய நீதியாகும் படி நமக்காக அவரை பாவமாக்கினார் ( எபி 9:14 ).*

# *CHAPTER 6*

# *அதிகாரம் 6*

# பவுலின் துன்பம் மற்றும் பொறுமை

***தேவனுடைய கிருபையை வெறுதவாக பெற கூடாது ( 1-2 ):***

***1. அ.*** *தேவனுடைய கிருபையை நாம் எப்படி பெற கூடாது?*

*a. வீணாக பெற கூடாது.*
*b. தேவனுடைய கிருபை ஐஸ்வரியம் ( எபே 1:7 ). அவருடைய கிருபையினால் நாம் தேவனுடைய பிள்ளைகளாக, மாற்றப்பட்டுயிருக்கிறோம். ( எபே 1:18-23; எபே 2:7-8 ).*
*c. தேவனுடைய கிருபை என்றும் உள்ளது ( சங் 118:1-4 )*
*d. அவர் நமக்கு கொடுக்கும் கிருபையை வீணாக்க கூடாது (1 கொரி 15:10 ).*
   *i. ஒரு தாலந்து வாங்கினவன் போல வீணாக்க கூடாது ( மத் 25:24-30 ).*
   *ii. கனி கொடுக்காத மரத்தை போல வீணாக்க கூடாது. ( லூக் 13:6-9 )*
   *iii. நல்ல நிலத்தில் விழுந்த விதையை போல பயன்படுத்தி கொள்ள வேண்டும். ( லூக் 8:15 ).*

***2. அ. “அநுக்கிரக காலம்”-*** *(உகந்த நாள் அப் 10:35; பிலி 4:18 )- இப்பொழுது உள்ள காலமே உகந்த நாள், சரியான நேரம். இதுவே இரட்சிப்பின் நாள். இதை தவறவிட கூடாது. காலத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ( எபே 5:14-16; லூக் 13:25 ). இப்பொழுது கதவு திறக்கப்பட்டிகிறது, இயேசு கதவை தட்டுகிறார், கதவை திறக்க தயராக இருக்க வேண்டும். ( லூக் 12:35-36; வெளி 3:20 ).*

***துன்பத்திலும், தேவனுக்கு உண்மையாய் இருப்பது ( 3-13):***

***3. அ. “ஊழியக்காரராக” -diakonas*** *என்கிற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு அடிமை, வேளையாள், அடிமை என்பது அர்த்தம். கொலே 3:24-யில் சொல்லப்பட்டது போல நாம் தேவனுக்கு வேலைக்காரர்கள்.*

***4-10 அ.*** *நாம் எப்படிப்பட்ட சூழ் நிலையிலும் இருந்தாலும் நாம் தேவனுடைய வேலையாள்கள் என்பதை விளங்க செய்ய வேண்டும்.*

***விக்கிரகங்களிடம் இருந்து விலகியிருக்க வேண்டும் ( 14- 18 )***

***14. அ.*** *அந்நிய நுகத்தில் என்ன செய்ய கூடாது? ஏன்?*
*அவிவிசுவாசிகளோடே பிணைக்கப்பட கூடாது. ஏனென்றால் நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தம் கிடையாது. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் கிடையாது.*

***15.*** ***அ.*** *நம்முடைய ஐக்கியம் தேவனோடும், அவருடைய பிள்ளைகளோடும் இருக்கிறது, நம்முடைய ஐக்கியம் தேவனோடு இல்லாதவர்களோடே இல்லை. உலகத்தில் நமக்கு ஐக்கியம் இல்லை. ( 1 யோவா 1:2,3; 2 தீமோ 2:22 ).*

***16.*** ***அ.*** *யார் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம்? கிறிஸ்தவர்களாகிய நாமே ( 1 கொரி 3:17 )*

***ஆ*** *இது பழைய ஏற்பாட்டில் இருந்த ஆலயம் போல கல்லினால், தங்கத்தினால், வெள்ளியினால் கட்டப்பட்டது இல்லை. ( 2நாள 5:1,2,14; 2 நாள 7:2,19,20 ). இஸ்ரவேலர்கள் தேவனுடைய உடன்படிக்கையை மீறியதால் இந்த ஆலயம் புறஜாதியார்களால்  இடிக்கப்பட்டது ( நெகே 1:3; புல 2:2-6; தானி 1:1-). மீண்டும் இயேசு இந்த ஆலயம் ( பழைய ஏற்பாட்டில் ) தரையோடே அழிக்கப்படும் என கூறினார் ( லூக் 21:5,6 ). அதே போல கி.பி 70 -யில்  அழிக்கப்பட்டது.*

***இ.*** *தேவனுடைய ஆலயத்தை அசுத்தப்படுத்தியவர்களை இயேசு பார்த்து அவர்களை கண்டித்தார் ( மத் 21:12; மாற் 11:15 ). ஆனால் இப்பொழுது ( கிறிஸ்துவின் யுகத்தில் ) கிறிஸ்தவர்களாகிய நாமே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறோம். ( கலா 3:27; 1 கொரி 3:16,17 ). நம்மை நாமே கெடுத்தாலோ அல்லது வேறே யாராவது கெடுத்தாலோ தேவன் அவனை கெடுப்பார்.*

***ஈ.*** ***“உலாவி”-*** *தேவன் நமக்குள் வாசம் பண்ணுகிறார். இயேசு கிறிஸ்து எப்படி விசுவாசத்தின் மூலம் நமக்குள் வாசம் செய்கிறரோ அதை போல தேவனும் விசுவாசத்தின் மூலம் வாசம் செய்கிறார். ( எபே 3:17 ).*

***17.*** ***அ.*** *ஏசாயா 52:11; வெளி 18:4 பார்க்கவும். நாம் தேவனுடைய ஆலயமாக, அவருடைய பிள்ளைகளாக இருக்கிறோம், ஆகவே நாம் விக்கிரகத்திற்கும், பழைய பாவத்திற்கும், அசுத்தமான காரியங்களுக்கும் நாம் விலகி இருக்க வேண்டும்.*

***18.*** ***அ.*** *யோசுவா 23:5-16, நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிற படியால், நாம் தேவனுடைய பிள்ளைகளோடே ஐக்கியமாய் இருக்க வேண்டும். இஸ்ரவேலர்கள் செய்த தவறை நாம் செய்ய கூடாது. நாம் எப்பொழுதும் தேவனுக்கே பயந்திருக்க வேண்டும். ( 2கொரி 7:1 ).*

# *CHAPTER 7*

# அதிகாரம் *7*

### பவுலின் சந்தோஷம்

***1.*** ***அ.*** *எப்படிபட்ட வாக்குத்தத்தங்கள் ( Promises ) நமக்கு இருக்கின்றன ?* *நாம் தேவனுடைய குமாரராய், குமாரத்திகளாய் இருக்கிறோம் எனவும், தேவனின் ஆலயமாய் இருக்கிறோம் எனவும், நாம் தேவனின் ஜனங்களாய் இருக்கிறோம் எனவும் அருமையான வாக்குத்தத்தங்கள் உள்ளான. (2கொரி 6: 16-18).*

***ஆ. "அசுசி"= அழுக்கு, கறை-*** *நாம் தேவனுக்கு முன்பாக கறையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவராக இருக்க வேண்டும். ( 1 தெச 3:13; 1 தெச 5:23 ).*

***இ. "சுத்திகரித்துக்கொண்டு"-*** *என்னுடைய முயற்சியால் நான் சுத்தமாக முடியாது. இயேசுவின் இரத்தமே நம்மை சுத்தமாக்கும். ( 1யோவா 1:7 ). ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கும் போது தண்ணீர் அவரை சுத்தமாக்கவில்லை, மாறாக இயேசுவின் இரத்தமே நம்மை சுத்தமாக்குகிறது ( ரோம 6:3-6; அப் 22:16 ). ஞானஸ்நானம் எடுத்த ஒருவர் தொடர்ந்து ஒளியாகிய வசனத்தில் நடக்கும் போது அவரை இயேசுவின் இரத்தம் தொடர்ந்து சுத்திகரிக்கிறது ( 1யோவா 1:6-7 ). இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடம் பரிந்து பேசுகிறார் ( 1 யோவா 2:1 ).*

***ஈ. "பரிசுத்தமாகுதலை தேவபயந்தோடே"-*** *தேவன் பரிசுத்தமுள்ளவர், அதனால் நாமும் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ( 1பேது 1:16 ). தேவன் நீதியுள்ளவர் அவர் ஒருவரே பயப்படதக்கவர் ( 1பேது 1:17; எபே 5:21 ).*

***2.*** ***அ.*** *பவுல் என்ன சொல்கிறார்? எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்யவில்லை; ஒருவனையும் கெடுக்க வில்லை; ஒருவனையும் வஞ்சிக்கவில்லை.*

***3,4.*** ***அ.*** *பவுலும், கொரிந்து சபையும்.*

***5.*** ***அ.*** *எப்படிப்பட்ட நிலையில் இருந்தார்கள்? புறம்மே போராட்டங்கள், உள்ளே பயங்களும் இருந்தன.*

***6.*** ***அ. "சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன்"-*** *தேவனே ஆறுதலின் தேவன் ( 1:3 ), தேவனே ஆறுதல் தருபவர் ( ரோம 15:6 ), சமாதனத்தின் தேவன் என பிலிப்பியர் 4:7 யில் பார்க்கிறோம்.*

***குறிப்பு:*** *பவுல் கொரிந்து சபையை குறித்து கவலை அடைந்திருந்தார். தீத்து வந்து சபையார் மனம் மாறினார்கள் என்று கூறின போது சந்தோஷமடைந்தார்கள் (7:7,9 ).*

***7-9*** ***அ.*** *பவுல் கொரிந்து சபையில் இருந்த தவறுகளை கண்டித்து முதல் நிருபத்தை எழுதியிருந்தார். அந்த நிருபத்தினால் கொரிந்து சபையில் நிறைய பேர் மனம்மாறி விட்டார்கள். அதை தீத்து மூலமாய் தெரிந்துக்கொண்ட பவுல் மகிழ்ச்சி அடைந்தார்.*

***10.* *அ.* *“தேவனுக்கேற்ற துக்கம்”* *என்ன செய்கிறது?* *இரட்சிப்புக்கு ஏதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. ( அப் 2:37, 38 யை பார்க்கவும் ).***

***ஆ* *“ லௌகிக துக்கமோ”* *என்ன செய்கிறது?* *மரணத்தை உண்டாக்குகிறது. உலக இச்சைகள், கவலைகள் நமக்கு வேண்டாம் ( தீத் 2:12 ). உலக கவலைகள் நம்மை தேவனுடைய காரியங்களில் பலன் கொடுக்காமல் இருக்க செய்கிறது ( லூக் 8:14 ). இந்த பூமியில் நமக்கு தேவையான காரியங்களை தேவனே தருகிறார் ( மத் 6:31-34 ).***

***11-16* *அ.* *மனம்திரும்பியதினால் பவுலின் சந்தோஷத்தை கூறுகிறார்***

# *CHAPTER 8*

# *அதிகாரம் 8*

### *கொடுத்தலை பற்றி ( அன்பின் உண்மையை சோதித்தல் )*

***மக்கெதோனிய சபையின் உதாரணம் ( 1-5 )***

***1. அ.*** *பவுல் எந்த சபையை குறித்து பேசுகிறார்? தேவன் அந்த சபைக்கு என்ன செய்தார்? மக்கெதோனியா நாட்டு சபை; தேவன் கிருபை அளித்தார்.*

***2. அ. "மிகுந்த உபத்திரவம்"= மனவேதனை, துன்பம், இன்னல், பிரச்சனை, வருத்தம்(Great Afflication)-*** *இதே வார்த்தை அப் 7:11-யில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***ஆ "கொடிய தரித்திரமுடைய"= வறுமை, ஏழ்மை -****இந்த சபையாரை பார்க்கும் போது லூக் 21-யில் வர கூடிய விதவையே நமக்கும் ஞாபகம்வருகிறது. தன் ஜீவனாத்தில் இருத்து கொடுத்தாள் என மாற்கு 12:44 பார்க்கிறோம்.*

***3. அ.*** *மக்கெதோனியா சபையார் எப்படி கொடுத்தார்கள்?*

*a. திராணிக்கு தக்கதாகவும், மிஞ்சியும்.*
*b. தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்கள், தன் மனதில் நியமித்த படியே உற்சாகமாய் கொடுக்ககடவன் என 2 கொரி 9:7-யில் பார்க்கிறோம்.*
*c. நாம் கொடுக்கிற காணிக்கை ஆவியின் படி உண்மையானதாக இருக்க வேண்டும் ( 2 கொரி 8:8 ).*
*d. இயேசுவை போல தன்னை தானே சுகந்த வாசனையாய் ( தேவனுக்கு பிரியமான ) காணிக்கையாய் தேவனுக்கு ஒப்புகொடுக்க வேண்டும். ( எபே 5:2 ).*
*e. உண்மையில்லாத காணிக்கையே தேவன் ஏற்றுக்கொள்வதில்லை ( அப் 5:1-5; மல் 1:8,14 ). உண்மையில்லாத காணிக்கை தேவனை ஏமாற்றுவது போல ( மல் 3:8,9 )*

***4. அ.*** *அவர்கள் என்ன செய்தார்கள்? பரிசுத்தவான்களுக்கு செய்யும் தர்ம ஊழியத்தின் பங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவேண்டிக்கொண்டார்கள்.*

***கருத்து:*** *வளர்ந்த கிறிஸ்தவர்கள் கொடுக்கிற காணிக்கையின் முக்கியத்துவத்தை ( 2 கொரி8:7 ) அறிந்திருக்கிறார்கள். உண்மையாக தேவன் அவர்களுக்கு சரியான நன்மையை கொடுப்பார் ( மல் 3:10 ).*

***5. அ.*** *மக்கெதோனியா சபையார் எப்படி கொடுத்தார்கள்? அவர்கள் தேவனுடைய சித்தத்தினாலே முதலாவது தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள் ( ரோம 12:1,2 ). முதலில் நாம் தேவனுடைய சித்தத்திற்கு அவருடைய வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள் .நம்முடைய செல்வம் தேவனுக்கு அவசியம் இல்லை ( சங் 16:2,3 ). நாம் கொடுக்கும் காணிக்கை பரிசுத்தவான்களின் குறைகளை நீங்க ( 1 கொரி 16:1 ). நாம் பரிசுத்தவான்களுக்கு கொடுப்பது தேவனுக்கு கொடுப்பதற்கு சமம் ( மத் 25:40 ).*

*7* ***அ.*** *மற்ற எல்லா காரியங்களிலும் பெருகிறது போல எதிலும் பெருக வேண்டும்? தர்ம காரியத்திலும் பெருக வேண்டும்.*

***8.*** ***அ.*** ***"அன்பின் உண்மை"-*** *நாம் கொடுக்கிறது நம்முடைய அன்பின் உண்மையை சோதிக்க கூடியதாக இருக்க வேண்டும். நாம் கொடுப்பதை வைத்தே தேவன் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறோம் என தெரியும் ( அப் 2:44-46; அப் 4:33-37 ). இதிலிருந்து ஆதி அப்போஸ்தலர்கள் உண்மையாய் அன்பின் படி கொடுத்தார்கள் என தெரிந்துகொள்கிறோம்.*

***9.*** ***அ.*** ***" ஐசுவரியமுள்ளவர்"-*** *இயேசு தான் ஐசுவரியமுடையவர் ஏனென்றால் இந்த பூமியில் இருக்க கூடியது எல்லாம் அவருக்கு உடையது. எல்லாம் அவருக்காக அவர் மூலமாய் உருவாக்கப்பட்டது ( கொலே 1:15-17 ). இயேசுவே ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் ( வெளி 1:5; வெளி 17:14 ).*

***ஆ*** ***"தரித்திரரானர்"-*** *ஆனால் நமக்காக இயேசு முழுவதும் தாழ்த்தினார். கொடுப்பதில் நமக்கு தேவனே முன்மாதிரி, அவர் நமக்காக தன்னுடைய குமாரனையே கொடுத்திருக்கிறார். ( யோவா 3:16 ). நமக்கு இயேசுவும் முன்மாதிரி நமக்காக தன்னை தானே தேவனுக்கு சுகந்த பலியாக ஒப்புக்கொடுத்தார் ( எபே 5:2 ).*

***12.*** ***அ.*** *தேவன் நமது முகத்தை பார்ப்பது இல்லை, அவர் நமது இருதயத்தை பார்க்கிறார்.*

***14.*** ***அ.*** *இதற்கான சரியான சான்று அப் 4:35-யில் பார்க்கலாம். நாம் பரிசுத்தவான்களுக்காக கொடுக்கும் போது நாம் குறைவாகுவது இல்லை. தேவன் நம்முடைய குறைகளை நீக்கிப்போடகூடியவர். ( பிலி 4:18,19 ).*

***15.*** ***அ.*** *எந்த பிரமாணம்? சமநிலை பிரமாணம்.*

***16,17*** ***அ.*** *யாரை குறித்து பேசுகிறார்?தீத்து*

***20.*** ***அ.*** *எதில் அவர்கள் மிகவும் எச்சரிக்கை உடையவர்களாக இருக்கின்றன? தர்ம பணத்தை குறித்து ஒருவனும் குற்றம் சாட்டதபடிக்கு.*

***21.*** ***அ.*** *நாம் யாருக்கு முன்பாக எல்லாம் யோக்கியமானதை செய்ய வேண்டும்? கர்த்தருக்கும், மனுசருக்கும். யோக்கியம்= Honest ( கனம், மரியாதை ) ( ரோம 12:17).*

***24.*** ***அ.*** *எவைகளை திருஷ்டாந்தப்படுத்துங்கள் என்று கூறுகிறார்கள்? எதற்கு முன்பாக? அன்பையும், புகழ்ச்சியையும், சபைக்கு முன்பாக திருஷ்டாந்தப்படுத்துங்கள் என்று கூறுகிறார்கள்.*

# *CHAPTER 9*

# *அதிகாரம் 9*

### *கொடுக்கிற காரியம்*

***1.*** ***அ. "பரிசுத்தவான்களுக்கு"-*** *யார் பரிசுத்தவான்கள்? ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டு சபையாய் இருக்க கூடியவர்கள். ( அப் 2:38; எபே 5:27 ).* ***"செய்ய வேண்டிய"-*** *இது நம்முடைய கடமையை காட்ட கூடியதாக உள்ளது.* ***"தர்மசகாயம்"-*** *இது கொடுக்க கூடியதை காட்டுகிறது ( 1 கொரி 16:1 ), வாரத்தின் முதல் நாளில் சேகரிக்கப்பட வேண்டும் ( 2கொரி 16:2 ). தர்ம ஊழியம் என 2 கொரி 8:4-யில் பார்க்கிறோம். நாம் இந்த தர்ம காரியத்திலும் பெருக வேண்டும். ( 2 கொரி 7,8 ).*

***2.*** ***அ.*** *நாம் இந்த கொடுக்கிற இந்த தர்ம சகாயத்திலும் வளர்ச்சி அடைய வேண்டும் என வேதம் கூறுகிறது. ( 8: 7 )*

***5.*** ***அ.*** *நாம் கொடுக்க வேண்டியது எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருக்க கூடாது? லோபத்தனமாய் இருக்க கூடாது, உதாரத்துவமாய் இருக்க வேண்டும். மக்கெதோனியா சபையை போல இருக்க வேண்டும் ( 2 கொரி 8: 1-4 ), 2 காசு போட்ட விதவையை போல இருக்க வேண்டும் ( லூக் 21:1-4 ), பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களை போல இருக்க கூடாது. ( மல் 4:8; மல் 1:7,8 ).மல் 1:14-யை பார்க்கவும்*

***கொடுப்பதற்கான காரணம்: ( 6-15 ).***

***6.*** ***அ.*** *யார் எப்படி அறுப்பார்கள்? சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான். நாம் உண்மையாய் அதிகமாய் கொடுக்கும் போது தேவன் அதிகமாய் ஆசிர்வதிக்கிறார். ( மல் 3 :10 ).*

*7.* ***அ.*** ***"விசனமாயுமல்ல,கட்டாயமாயுமல்ல"-*** *பழைய ஏற்பாட்டில் தசம்பாகம் இருந்தது. தனக்கு வரும் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை தேவனுக்கு கொடுக்க வேண்டும். ( உபா 14:22-27 ). ஆனால் புதிய ஏற்பாட்டின் படி நாம் தசம்பாகம் கொடுக்க வேண்டியது இல்லை, ஏனென்றால் பழைய ஏற்பாடு முடிந்துவிட்டது. இயேசுவே பழைய ஏற்பாட்டுக்கு முடிவாயிருக்கிறார். ( ரோம 10:4; எபே 2:15 ). இன்று பழைய ஏற்பாட்டின் படி தசம்பாகம், இசை கருவிகள் பயன்படுத்துவது போன்ற காரியங்களை செய்பவர்கள் கள்ள போதகர்களாக பொய் கூறுபவர்களாக இருக்கின்றன.*

***ஆ*** *தேவன் யாரிடம் பிரியமாய் இருக்கிறார்கள்? உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில்.* ***" உற்சாகம்"= Cheerful ( மகிழ்ச்சி, சந்தோஷமாய், காலம் தவறாத )***

***8.*** ***அ.*** ***"சம்பூரணமுடையவர்களாகவும்"= நிறைவு, மனநிறைவு-*** *இதே போன்றே 1 தீமோ 6:6-யில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் நம்மை எல்லாவற்றிலும், நற்கிரியைகளிலும் சம்பூரணமுடையவர்களாக பெருக செய்ய தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.*

***9.*** ***அ.*** *சங் 112:9 யை பார்க்கவும்*

***10.*** ***அ.*** *விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது யார் ? தேவன் ( அப் 14:17; யாக் 1:17; ஏரே 10:23 )*

***ஆ***  *இங்கு விதை என்பது எதை குறிக்க கூடியதாக இருக்கும்? 2 கொரி 9:6-யின் படி பார்த்தால் நாம் கொடுக்கிற காணிக்கையே விதை என குறிப்பிடப்பட்டுள்ளது.*

***இ.***  ***"விதையை பெருகபண்ணி"-*** *சிறுக விதைக்கிறவன், சிறுக அறுப்பான் பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான். நாம் கொடுக்கிற காணிக்கையினால் நமது விதையை தேவன் பெருக செய்கிறார். ( மல் 3:10; மத் 25:40; அப் 20:35 ).* ***"நீதியின் விளைச்சலை"-*** *நாம் சபைக்காக விதைப்பது நீதியின் விளைச்சல், தேவன் இதை வர்த்திக்க செய்கிறார்.*

***11-14 அ.***  *கொடுக்கிறதினாலே உண்டாக கூடிய நன்மைகள்?*

- *a. தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாகிறது.*
- *b. எவ்விதத்திலும் சம்பூரணமுடையவர்களாக மாறுகின்றன.*
- *c. பரிசுத்தவான்களின் குறைகள் நீங்குகிறது.*
- *d. இதினால் அநேகர் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்*
- *e. அநேகர் தேவனை ஸ்தோத்திரம் செய்கிறதில் பெருகிறார்கள்*
- *f. பரிசுத்தவான்கள் இதினால் நன்மையை அநுபவிக்கிறார்கள்.*
- *g. கொடுத்தவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்கள்.*
- *h. கொடுத்தவர்கள் மீது வாஞ்சையாயிருக்கிறார்கள்.*

***15.  அ.***  ***"சொல்லி முடியாத ஈவு"-*** *தேவன் நமக்கு செய்த நன்மைகளை சொல்லி முடியாது. அவைகள் எல்லாவற்றிலும் பெரியவை. நாம் அவரிடம் இருந்து நன்மை பெற்றுக்கொண்டோம், பெற்றுக்கொண்டே இருக்கிறோம். நாம் தேவனுக்கு நன்றி உடையவர்களாய் இருக்க வேண்டும்.*

## *CHAPTER 10*

## *அதிகாரம் 10*

### *பவுலின் ஊழியத்தை பற்றி*

*1. அ. **பவுல் எப்படி நடந்து கொண்டார்?** முன்பாக தாழ்மையாக, தூரத்தில் இருக்கும் போது கண்டிப்பாக நடந்து கொண்டார்.*

*2. அ. பவுலை குறித்து சிலர் என்ன கூறினார்கள்? மாம்சத்தின் படி நடக்க கூடியவன்*

*3. அ. **"மாம்சத்தில் நடக்கிறவர்"-** நாம் எல்லாருமே இந்த பூமியில் இருக்கும் போது மாம்ச சரீரத்தை உடையவர்களாகவும், அந்த மாம்சத்திலேயே நடக்க கூடியவர்களாய் இருக்கிறோம் ( 2 கொரி 5:2-4 ). இந்த மாம்சம் ஆவிக்கு விரோதமாக யுத்தம் செய்கிறது ( கலா 5:16 ).*

*ஆ **"மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல"-** நாம் இந்த மாம்சத்தில் இருத்தாலும் இந்த மாம்சத்தின் படி நடக்காமல், இந்த மாம்சம் படி இச்சையியாமல் ( எபே 2:3 ). ஆவியின் பிரமாணமாகிய ஆவியின் படி நாம் ஆவியினால் நடத்தப்படுகிறோம். ( ரோம 8:2-4 ). இது நாம் மாம்சத்திற்கு உரியவர்கள் இல்லை, நாம் தேவனுக்கே உரியவர்கள் என்பதை காட்டுகிறது.*

*இ. நாம் ஆவியின் படி போர் செய்கிறவர்கள். ஆவி என்பது இயேசுவால் கொடுக்கப்பட்ட ஆவியின் பிரமாணமாகிய புதிய ஏற்பாடு ( யோவா 6:63; எபே6:17; ரோம 8:2; 2 கொரி 3:6; யோவா 12:48; யாக் 2:12; எபி 7:21,22; எபி 8:10 ). நாம் எதை செய்தாலும் புதிய ஏற்பாட்டின் படி செய்கிறோம். நாம் புதிய ஏற்பாட்டின் படி நடக்கிற படியால் நாம் ஆவியின் படி போர் செய்கிறோம் ( 2 கொரி 3:6 ). நம்முடைய போர் சாத்தானுக்கு எதிராக ( எபே 6:11 ). இவன் மாம்சத்தின் பாவங்களைவைத்து, அரசங்ககளை வைத்து நம்மோடு போர் செய்கிறான். ஆனால் நாம் ஆவியின் படி நடக்கிறபடியால் நாமே வெற்றி கொள்கிறோம். ( வெளி 17:14; ரோம 16:20 ).*

*4. அ. நம்முடைய போர் ஆயுதங்கள் எப்படிப்பட்டவைகளாய் இருக்கின்றன? மாம்சத்திற்கேற்றவைகள் இல்லை. நமது போராயுதங்களை குறித்து எபே 6:11-18-யில் நாம் பார்க்கிறோம். அவைகள் அரண்களை நிர்மூலமாக்க தேவ பலனாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையே நமக்கு பெரிய ஆயுதங்களாய் இருக்கின்றது. ( ஏரே 5:14; ஏரே 23:29; எபே 6:17; வெளி 11:5 ).*

*5. அ. தேவன் தந்த போராயுங்களால் நாம் என்ன செய்கிறோம்? தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, கிறிஸ்துவுக்கு கீழ்படிய சிறைப்படுத்துகிறோம். தேவனுடைய வார்த்தையே நம்மை குத்தி கிறிஸ்துவுக்குள் கீழ்படிய செய்கிறது. ( அப் 2:37; அப் 8:31-39; எபி 4:12 ).*

*8. அ. கர்த்தர் எதற்கு அதிகாரம் கொடுத்தார்? ஊன்றக் கட்டுகிறதாக்கு. நாம் அப்போஸ்தலருடைய உபதேசத்திற்கு கீழ்படிந்திருக்கிறோம். அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரமாய் இருக்கிறார்கள் ( எபே 2:20 ).*

*9-11 அ. பவுலை குறித்து சில கொரிந்தியரின் பார்வை*

***12.*** **அ.** *யார் புத்திமான் கிடையாது? தங்களை தாங்களே ஒப்பிட்டு மெச்சி மேன்மை பாராட்டுபவர்கள் ( யோவா 12:43; சங் 36:2 ).*

***13.*** **அ.** *எப்படி மேன்மை பாராட்டினார்? தேவன் பகிர்ந்த அளவுப்பிரமானத்தின் படியே*

***14,15*** **அ.** *பவுல் என்ன கூறுகிறார்? அளவுக்கு மிஞ்சிப் போகிறதுமில்லை, அளவுக்கு மீறி மேன்மை பாராட்டினதுமில்லை ( 1கொரி 2:1,2 ).*

*17.* ***"கர்த்தரைக்குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்"-*** *தேவனே கனத்திற்கும், மகிமைக்கும் பாத்திரர், ஏனென்றால் அவரே சத்தியபரர் ( ரோம 3:4 ). நாம் பொய்யர்களாய் இருந்தும் இயேசுவினால் நாம் நீதிமான்களாக, பரிசுத்தவான்களாக மாற்றப்பட்டு இருக்கிறோம். ( வெளி5:8-10 ). ஆகவே நாம் மனிதர்களை அல்ல தேவனையே மேன்மை பாரட்ட வேண்டும் ( வெளி 4:10,11; வெளி 7:9-12 ).*

***18.*** **அ.** *யார் உத்தமன் ? யார் உத்தமன் இல்லை? தேவனால் புகழ்ப்படுகிறவன் உத்தமன். தன்னை தானே புகழுகிறவன் உத்தமன் இல்லை ( நீதி 25:27; நீதி 17:19; ஓப 1:4 ).*

# *CHAPTER 11*

# *அதிகாரம் 11*

***கொரிந்து சபையின் மீது உள்ள அக்கரை: ( 1-3 )***

*2.* ***அ.*** ***"கற்புள்ள கன்னிகை"-*** *இங்கு பவுல் சபையை கற்புள்ள கன்னிகையாகவும், கிறிஸ்துவை ஒரே புருசனாகவும் காட்டுகிறார். சபை கிறிஸ்துவின் மனைவியாக உள்ளது. ( எபே 5:22-23 ). கற்புள்ள என்பது தனக்கு நியமிக்கப்பட்ட ஒரே புருசனையே சார்த்திருப்பது என்பதை குறிக்கும் வேசித்தனம் இல்லாத வேறே ஒரு ஆணை சார்த்திருக்காமல் இருப்பது ஆகும். இங்கு ஆவிக்குரிய கற்புள்ள தன்மையை காட்டுகிறது. இஸ்ரவேலர்கள் தேவனை விட்டுவிட்டு பொய் தேவர்களான விக்கிரகத்தை பின்பற்றினதினால் அவர்கள் ஆவிக்குரிய வேசிதனம் செய்தார்கள் அதாவது ஆவிக்குரிய விபச்சாரம் செய்தனர் ( எசே 23 : 2-4,5; எசா 1:21; 1 நாளா 5:25 ).*

***ஆ*** ***"ஒரே புருசன்"-*** *நமக்கு ஒரே புருசனே, ஒரே புருசனுக்கு ஒரே மனைவியே. சபை ஒன்று சபைக்கு தலைவர் ஒருவர் ( கொலே 1:18,24 ). ஒருவேளை நாம் இயேசுவால் உருவாக்கப்பட்ட கற்புள்ள கன்னிகையான இந்த கிறிஸ்துவின் சபையை விட்டு மனிதனால் உருவாக்கப்பட்ட மனிதனை தலையாக கொண்டிருக்கும் சபைக்கு போகும் போது நாம் ஆவிக்குரிய விபச்சாரம் செய்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் சபையில் இருக்க கூடியவர்களே கரைப்படாதவர்கள் ( வெளி 14:1-4 ).*

*3.* ***அ.*** ***"சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினால்"-*** *பிசாசின் தந்திரம் நமக்கும் தெரிந்தவைகள் என பவுல் 2கொரி 2:11-யில் கூறினார். சாத்தான் நம்மை விழ செய்யவே, நம்மை மோசம் போக்கவே சிங்கம் போல சுற்றிதிரிக்கிறான். ( 1 பேது 5:8 ). பிசாசு ஆதியிலிருந்தே பாவம் செய்கிறான் ( 1 யோவா 3:8 ). எப்படி பிசாசு ஏவாளை தான் செய்வது சரிதான் என நம்பவைத்து தேவனுடைய வார்த்தையை மீற வைத்தானோ. அதை போலவே இன்றும் நிறைய மக்களை தன்னுடைய தந்திரத்தினால் தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகி போக செய்கிறான்.*

***ஆ*** ***"உண்மையினின்று விலகும்படி"-*** *அவன் நம்மை மோசம் போக்கி சத்தியத்தை விட்டு விலகிபோக செய்கிறான். ( 1 தெச 3:5; 2 தெச 2:9-13 ). ஆனால் நாம் அவனுக்கு எதிர்த்து நிற்கும் போது அவன் நம்மை விட்டு போக கூடியவன் ( 1 பேது 5:9 ). சத்தியத்தில் மட்டும் உறுதியாய் இருக்கும் போது அவன் நம்மை விட்டு ஓட கூடியவன் ( வெளி 2:9,10; 2 பேது 1:19; எபி 3:12-14).*

*4.* ***அ.*** *எப்படி கெடுக்கப்படுகிறது? அல்லது கிறிஸ்துவின் அன்பை விட்டு எப்படி விலகப்படுகிறது?*

*a.* *வேறே இயேசுவை பிரசங்கிப்பதினால் ( மத் 24:23,24; 2 தெச 2:3-4 ).*
*b.* *வேறே ஆவியை ( 1 யோவா 4:1-3; ரோம 8:1-8 ).*
*c.* *வேறே சுவிசேஷத்தினால் ( கலா 1:6-11; 2 யோவா 1:9,10 ).*

*5.* ***அ.*** *பவுல் ஒரு விசேஷமான அப்போஸ்தலராய் இருக்கிறார் ( 1 கொரி 15:8 ). 12 அப்போஸ்தலர்களை போல பவுலும் அப்போஸ்தலர். அவர்களிலும் இவர் குறைந்தவர் இல்லை, அப்போஸ்தலர்களுக்கான தகுதி அப் 1 -வது அதிகாரத்தில்*

*கடைசி பகுதிகளிலில் நம்மால் பார்க்க முடிகிறது. இந்த தகுதிகள் இன்று யாருக்கும் இல்லை. அதினால் அப்போஸ்தலர்கள் இன்று பூமியில் இல்லை, மாறாக நான் பவுலை போன்று அழைக்கப்பட்டேன் என கூறுபவர்கள் கள்ள அப்போஸ்தலர்களாக இருக்கிறார்கள் ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் மட்டும் விசேஷமாய் வந்தார் இதை 1 கொரி 15:5-10-யில் பார்க்கலாம். இதில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பின்பு யாரும் அப்போஸ்தலனாக மாறவில்லை என்பதை கவனியுங்கள் ( 2 கொரி 12:12 ).*

***6-12 அ.*** *இங்கு கொரிந்து சபையில் பவுலின் செயல்களையும், அப்போஸ்தலர் என்கிற பெயரை குறை சொல்லி நிறைய பேர் இருந்தார்கள். இதற்கான காரியங்களை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பேசுகிறார்.*

***13. அ.*** *அப்போஸ்தலருக்கு, அவர்களுடைய வார்த்தைக்கு எதிர்த்து நிற்கிறவர்கள், அவர்களுடைய வார்த்தையின் படி செய்ய மனம் இல்லாதவர்கள் எப்படிப்பட்டவர்கள்? கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவின் அப்போஸ்தலர் வேஷத்தை தரித்து கொண்டவர்கள்.*

***14. அ. "அது ஆச்சரியமல்ல"-*** *இயேசுவும் கள்ள கிறிஸ்துவுகள் வருவார்கள் என கூறினார்கள் ( மத் 24:24 ). இந்த கள்ள அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளால் நிறைய பேர் சத்திய மார்க்கதை விட்டு விலகி பொய்யான உபதேசத்திற்கு செல்வார்கள் ( 2 பேது 2:1-2 ), சபைக்குள் இருந்தே இப்படிபட்டவர்கள் வருவார்கள் ( அப் 20:29,30 ), இவர்கள் இயேசுவை பின்பற்றுவதாக கூறுவார்கள் ஆனால் இவர்கள் செய்வது இயேசுவால் சொல்லப்பட்ட வசனத்திற்கு புறம்பாக இருக்கும்( வெளி 13 :11 ).*

***15. அ. "நீதியின் ஊழியகாரருடைய வேஷம்"-*** *இன்று நிறைய பேர் கிறிஸ்தவின் ஊழியகாரர்கள் என கூறி வேஷம் போடுகிறார்கள். தங்கள் மனசும், உணர்ச்சியும் சொல்வதை கேட்டு சத்தியத்தை விட்டு விலகி வேஷம் போட்டு சத்தியத்தில் இருப்பவர்களை விலக செய்கின்றன. அவர்களின் முடிவு மிகவும் போசமான இருக்கும்.*

***16-22 அ.*** *மீண்டும் பவுல் தன்னை பற்றிய உண்மையை அந்த சபையாருக்கு புரிய வைக்கிறார்.*

***23-27 அ.*** *சபைக்காக, கிறிஸ்துவின் ஊழியத்திற்காக பவுல்ப்பட்ட பாடுகளை கூறுகிறார்.*

***28. அ.*** *பவுலுக்கு முதலில் எது வலியை தருகிறது? அவர் அடிப்பட்டதோ, காயங்களோ, அவமானமோ இல்லை சபையை குறித்தான கவலை தான் வலியை தருகிறது என கூறுகிறார். யாராவது சபையை ஏமாற்றி விடுவார்களோ என்கிற கவலை தான் நாள் தோறும் நெருக்குகிறது என கூறுகிறார் ( 29 வசனம் ).*

***29. அ.*** *பவுல் மீண்டுமாக தான் ஒரு அப்போஸ்தலன் என்பதை உறுதிபடுத்துகிறார்.*

# *CHAPTER 12*

# *அதிகாரம் 12*

### அப்போஸ்தலனாகிய பவுல்

*1.* **அ.** ***"மேன்மை பாராட்டுகிறது எனக்கு தகுதியல்லவே"-*** *உண்மையாகவே தகுதி என்பது நமக்கானது இல்லை. பவுல் முன் அதிகாரங்களில் எங்களுக்கு தகுதி தேவனே கொடுத்தார் என கூறுகிறார் ( 2 கொரி 3:5,6; 2 கொரி 4:7 ). ஆகவே நாம் தேவனை குறித்தே நாம் மேன்மை பாராட்ட வேண்டும். ( 2 கொரி 10:17; வெளி 7:12; 1 கொரி 6:20 ).*

*2.* **அ.** ***"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுசன்"-*** *மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டவன்.*

*3.* **அ.** *அந்த மனிதனுக்கு என்ன நடந்தது? எங்கே போனான்? பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவனுடைய பிள்ளைகள் இளைப்பாறும் இடம் ( வெளி 6:11; லூக் 16:25 ). மனுசர்கள் பேசாத, பேச வாக்குக்கெட்டாதவைகளை கேட்டான்.*

*5,6* **அ.** *பவுல் எதை குறித்து மேன்மை பாராட்டுவேன் என கூறுகிறார்? அவருடைய பலவீனத்தை குறித்து.*

*7,8* **அ.** *பவுல் தன்னை உயர்த்தாதபடிக்கு அவருடைய உடம்பில் எது கொடுக்கப்பட்டிருக்கிறது? முள். பவுல் தன்னை உயர்த்தாத படிக்கு தன்னை குட்டும் சாத்தானுடைய தூதன்.*

*9.* **அ.** ***"கிருபை உனக்கு போதும்"-*** *உண்மையில் தேவனுடைய கிருபையே பெரியது ( எபே 1:17; சங் 118:1-5; ரோம 5:14-17; சங் 103:11 ). நம்முடைய பலவீனத்தில் தேவனுடைய பலன் பூரணமாய் இருக்கிறது.*

*10.* **அ.** *பவுல் தன்னை தாழ்த்துவதை நம்மால் பார்க்க முடிகிறது.*

*a. அவர் தன்னை ஒன்றும் இல்லை என்று கூறுகிறார்.*
*b. நாமும் கூட ஒன்றும் இல்லை. ( சங் 39:4-6; சங் 49:12,17; கலா 6:3).*
*c. நாம் நம்மை தேவனோடே ஒப்பிட முடியாது. நாம் நம்மையே மேன்மை பாராட்ட முடியாது ( ஏசா 29:16 ). ஏனென்றால் தேவனே சர்வ வல்லமையுள்ளவர் ( ஏசா 42:5 ).*
*d. தேவன் கொடுத்த சத்தியத்திற்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாது. ( 2 கொரி 13:8 )*

**ஆ** *பவுல் ஒன்றுமே இல்லையென்றாலும் தேவன் அவரை அப்போஸ்தலராக மாற்றியிருக்கிறார் ( கலா 1:1 ). அப்போஸ்தலர்களை விட பவுல் குறைந்தவர் இல்லை. 12 அப்போஸ்தலர்களை போல பவுலும் அப்போஸ்தலராக, புறஜாதிகளுக்கு விசேஷசித்த அப்போஸ்தலராக இருக்கிறார் ( கலா 2:7; 1 கொரி 15:8-10 ).*

*12.* **அ.** *அப்போஸ்தலுக்கான அடையாளம் எவை? பொறுமை, அதிசயம், அற்புதம், வல்லமை போன்றவைகளை பவுல் செய்தார் ( அப் 19:11,12; ரோம 15:18 ), அப் 1:21-24 யை பார்க்கவும். பவுல் மாத்திரம் விஷேசித்தவர் ( 1 கொரி 15:8-10 ).*

***18. அ.*** *தேவனுடைய ஊழியர்கள் அனைவரும் ஒரே அடிசுவடுகளை பின்பற்றுகிறார்கள். இந்த அடிசுவடுகள் தேவனால் கொடுக்கப்பட்டது ( 1 பேது 2:21; 1 கொரி 16:10; 1 கொரி 4:17; 1 கொரி 11:1 ).*

***19. அ.*** *சகலத்தையும் எதற்காக செய்கிறேன் என பவுல் கூறுகிறார்? உங்கள் பக்திவிருத்திக்காக ( ரோம 14:19; ரோம 15:1-3; 1 தெச 5:11 ).*

***20,21. அ.*** *பவுல் எதற்காக பயந்தார்? முன்பு பாவம் செய்தவர்கள் மனம் மாறாமல் இருப்பதை குறித்து.*

***குறிப்பு:*** *கொரிந்து சபையில் முதல் நிருபத்தை பெற்ற போதே சிலர் மனம் மாறிவிட்டனர். ஆனாலும் எல்லாரும் இல்லை.*

# *CHAPTER 13*

# *அதிகாரம் 13*

### ***பவுலின் எச்சரிக்கை மற்றும் பிரியாவிடை***

***எச்சரிப்பு ( 1-10 ):***

***1,2*** ***அ.*** *தான் மீண்டும் வருவதை குறித்து பவுல் பேசுகிறார்.*

***4.*** ***அ.*** *நாம் கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறோம். ஏனென்றால் நாம் அவருக்குள் இருக்கிறோம். அவர் நமக்குள் இருக்கிறார். ( கலா 2:20; கலா 3:27; 2 தீமோ 2:11-13 ).*

***5.*** ***அ.*** *நாம் என்ன செய்ய வேண்டும்?*

*a. நாம் விசுவாசமுள்ளவர்களா என்பதை சோதித்து பார்க்க வேண்டும். ( 1பேது 1:7; யாக் 1:3,2; 1 கொரி 3:13,14 ).*
*b. கிறிஸ்து நமக்குள் இருக்கிறார என்பதை சோதித்து பார்க்க வேண்டும், ( கலா 6:4; ரோம 8:1-11 ). சத்தியத்தின் படி நாம் நடக்கும் போது கிறிஸ்து நமக்குள் இருக்கிறார் என்பதை சத்தியத்தின் மூலம் தெரித்துக்கொள்ள முடியும் ( யோவா 14:23; யாக் 1:23 ). விசுவாசத்தின் மூலமாய் கிறிஸ்து நமக்குள் இருக்கிறார் ( எபே 3:16; கலா 3:27 ). உணர்ச்சியினாலோ, தொடுவதினாலோ நம்மால் தெரிந்து கொள்ள முடியாது. ( எபி 11:1 ).*

***8.*** ***அ.*** *நம்மால் என்ன செய்ய முடியாது? சத்தியத்திற்கு விரோதமாய் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நம்மால் சத்தியத்தை மாற்ற முடியாது ( 2 தெச 2:10-12; 1தீமோ 4:3,4; கலா 1:8-10 ).*

***10.*** ***அ.*** *எதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது? கட்டவே ( 1 கொரி 3: 10,11 ).*

***கடைசி வாழ்த்துகள் ( 11-14 ):***

***11.*** ***அ. "சந்தோஷமாயிருங்கள்"-*** *பிலி 3:1; பிலி 4:4;* ***"நற்சீர் பொருந்துகள்"-*** *1கொரி 1:10;* ***"ஆறுதல் அடையுங்கள்"-*** *ரோம 15:4 ( தேவனுடைய வார்த்தையே நமக்கு ஆறுதல் தரும் );* ***"ஏகசிந்தையாயிருங்கள்"-*** *1 கொரி 1:10; பிலி 2:2-4;* ***"சமாதனாமாயிருக்கள்"- ரோம 12:18***

***14.*** ***ஆமென்***